
# மனிதத் தன்மை !

அரசியலிலோ சமுதாயத்திலோ எவ்வளவு மாறுபட்ட அபிப்பிராயம் இருந்தாலும், தனிப்பட்ட முறையில் நான் யாருக்கும் விரோதியில்லை, யாரிடமும் துவேஷமில்லை. மனிதர்கள் எல்லோரும் ஒரே அபிப்பிராயம் கொள்ள முடியாது. சரியாகவோ தப்பாகவோ அபிப்பிராய பேதம் ஏற்படுவது மனிதனுக்கு இயற்கையேயாகும். ஒருவருக்கொருவர் அபிப்பிராயத்தை மதிக்காவிட்டாலும , ஏற்காவிட்டாலும், வெளியில் எடுத்துச் சொல்ல இடம் கொடுக்க வேண்டியதானது, மானத்திலும் மனிதத் தன்மையிலும் கவலை உடையவனின் கடமையாகும்....நீங்கள் நான் சொல்லுவதைக் கேளுங்கள். ஆனால் உடனே நம்பி விடாதீர்கள். நாளை நமது எதிர் அபிப்பிராயக்காரர்கள் வருவார்கள். அவர்கள் சொல்லுவதையும் கேளுங்கள். பிறகு ஒரு முடிவுக்கு வாருங்கள். இதுதான் எங்கள் ஆரம்பப் பிரார்த்தனை, எங்கள் முதல் வேண்டுகோள்.


**- தந்தை பெரியார்**



# சுயமரியாதை சமதர்ம உலகம் !

பார்ப்பனியம் என்பது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய உணர்வுகளை மறுப்பது ஆகும். பார்ப்பனரல்லாதார் உலகம் என்பது, பார்ப்பனர்களை அகற்றி விட்டு, அவர்களது இடத்தில் பார்ப்பனரல்லாத சூத்திர ஜாதியினர் அமர்ந்துகொண்டு அவர்களுக்குக் கீழே உள்ளவர்களை நசுக்குவது அல்ல; மாறாக சாதியம், ஆணாதிக்கம், பணக்காரனாதிக்கம் ஆகிய ஒழித்த சுயமரியாதை சமதர்ம உலகமே அது !

**- தந்தை பெரியார்**







தந்தை பெரியாரின் ஒவ்வொரு பிறந்தநாளும் 'சமூக நீதி நாளாக' கடைபிடிக்கப்படும் என்றும், அப்பிறந்தநாள் அன்று 'சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்க வேண்டும்' என முதல்வர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, நேற்று காலை சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள அறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் சிலை முன்பு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தலைமையில் கழகத்தினர் ஏராளமானோர் 'சமூக நீதி நாள்' உறுதிமொழி ஏற்றனர். இந்நிகழ்ச்சியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் பி.செல்வராஜ் எம்.பி., கழக செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் ஆஸ்டின், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம், காஜா, பூச்சி எஸ். முருகன், மாவட்டச் செயலாளர்கள் நே. சிற்றரசு, மயிலை த. வேலு எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் மா.பா. அன்புதுரை, நந்தனம் கி.மதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் ஏராளமானோர் பங்கேற்று உறுதிமொழி ஏற்றனர்.

# ஆயிரமாண்டு மடமைகளைக் களையெடுத்த அறிவியக்கம்! ஆயிரமாண்டுகளுக்கான பாதையைச் செப்பனிடும் தொண்டியக்கம்!

## கழக பவளவிழாவையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, செப். 18 -

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**"நான்தான் திராவிடன் என்று நவில்கையில்**

**தேன்தான் நாவெலாம்! வான்தான் என்புகழ்!" எனப் பாவேந்தர் பாடிய உணர்ச்சி தமிழ்நிலமெங்கும் வீச, தமிழ்த்தாயின் தலைமகன் பேரறிஞர் அண்ணா உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகம் 75 ஆண்டுகளை நிறைவு செய்கிறது! தமிழுக்கு ஒரு இன்னலென்றால் தடுத்து நிறுத்தத் தம்பி மார் படை உள்ளதென்றுதமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ள உடன்பிறப்புகளானோம் நாம்!**

**ஆயிரமாண்டு மடமைகளைக் களையெடுத்த அறிவியக்கம்! இன்னும் ஆயிரமாண்டுகளுக்கான பாதையைச் செப்பனிடும் தொண்டியக்கம்! தமிழினத் தலைவர் கலைஞர் கட்டிக்காத்த இந்த இயக்கத்தில் பாடுபடும் அத்தனை பேருக்கும் இந்தத் தலைமைத் தொண்டனின் வாழ்த்துகள்! இன்று மாலை பவள விழா முப்பெரும் விழாவில் உங்களைக் காணக் காத்திருக்கிறேன்...**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் தெரிவித்துள்ளார்.




### அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை:

# பல்லவபுரம் வடக்குப் பகுதிக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. – எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. – நிர்வாகிகள் பங்கேற்பு!

பல்லவபுரம், செப்.18-

2026 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள பல்லாவரம் வடக்குப் பகுதி தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (19.09.2024, வியாழக்கிழமை) மாலை 5 மணிக்கு பல்லாவரம் துரைப்பாக்கம் 200 அடி சாலையில் உள்ள வெங்கடேஷ் மஹாலில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு மண்டலத் தலைவர் - தாம்பரம் மாநகராட்சி - பகுதிக் கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமை தாங்குகிறார்.

பகுதிக் கழக அவைத் தலைவர் இரா.சேகர் வரவேற்புரையாற்றுகிறார்.

பகுதிக் கழக துணைச் செயலாளர்கள் ச.சிவக்குமார், வ.முத்து, பி.அம்பிகா, பகுதிக் கழகப் பொருளாளர் எஸ்.நெடுஞ்செழியன், மாநகர பிரதிநிதிகள் எம்.இளங்கோ, மீசை கே. ராதா, ஐ.கஜேந்திரன், செ. கன்னியப்பன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்.

பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் - காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் - தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர் - மாநகர துணை செயலாளர் க. வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் - மாநகர அவைத் தலைவர் - கோ.காமராஜ், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ்.கே.இப்ராகிம்,

பல்லாவரம் தெற்குப் பகுதிக் கழக செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட், செம்பாக்கம் வடக்குப் பகுதி கழக செயலாளர் ஏ.கே.கருணாகரன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ. தமிழ்மாறன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் ந. நவீன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் மு.ரஞ்சன், காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு. டி. பிரகாஷ், காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன்,

மாவட்ட பிரதிநிதிகள் மு.நாகலிங்கம், க.ரமேஷ், த.ராஜாராமன், கே.தனசேகரன், காஞ்சி வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நல துணை அமைப்பாளர் வே.தாமோதரன், காஞ்சி வடக்கு மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் மா.சந்திரகேசவன், எம்.ஐ.டி. எஸ்.விஜய், ப.ராஜா, ஜெ.இன்சமாம், என்.எஸ்.மதன கோபால், வீடியோ பி.ஹரி, டபிள்யூ ஜூலியன் அதிசயராஜ், எஸ்.ஹரி, ஜெ. பிரசன்னா, ஜி.நரேஷ்பாபு, எம்.பிரகாஷ், ஐ.டில்லிபாபு, எம். இளவரசன், எம்.கமல்ராஜ், ஏ.அசோக்குமார், ஒய்.பதருனிஷா,

பல்லாவரம் வடக்குப் பகுதி வட்டக் கழக செயலாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் தே.இளங்கோவன், பி.பரமசிவம், பி.ராஜ்குமார், டி.வி.ராஜா எம்.சி., எம்.அந்தோணி, டி.எச். பிரான்சிஸ்பால், கோ.ரங்கநாதன், லதா சிவக்குமார் எம்.சி., ரேணுகா தேவி பரமசிவம் எம்.சி., மங்கையர் திலகம் ராஜ்குமார் எம்.சி., பிரேமலதா பண்டேரிநாதன் எம்.சி.

பல்லாவரம் தெற்குப் பகுதி வட்டக் கழக செயலாளர்கள் வி.என்.சிலம்பரசன், எம்.முருகையன், பி.வெங்கடேசன், ஆர்.கே.நாகராஜ், எஸ்.முஜிபுர் ரகுமான், டி.கன்னியப்பன், ஆர். காமேஷ் ரங்கநாதன் மற்றும் பல்லாவரம் வடக்குப் பகுதிக் கழக பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர்.



கழகப் பவள விழாவையொட்டி வீடுகள்தோறும் கழகக் கொடி ஏற்ற கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, சட்டப் பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி திருவண்ணாமலையில் தமது இல்லத்தில் கழகக் கொடி ஏற்றினார்.

# பிரதமர் மோடி பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி



சென்னை, செப்.18-

பிரதமர் மோடி அவர்களின் பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்! தாங்கள் நீண்டகாலம் நிலைத்த உடல்நலத்துடன் திகழ்ந்திட விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

### செப்டம்பர் 20-ஆம் தேதி அன்று நடைபெறுகிறது

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் 20.09.2024 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் ஆலந்தூர் கத்திப்பாரா ஜோதி திரையரங்கம் அருகில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில், அவைத் தலைவர் த. துரைசாமி தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்ட பொருளாளர் வெ. விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில - மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்: வருகிற செப்டம்பர் 28 அன்று காஞ்சிபுரத்தில் முதல்வர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும், கழக பவள விழா மாபெரும் பொதுக்கூட்டம் குறித்து, கழக வளர்ச்சி.**

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

### சென்னை மேற்கு மாவட்டம்

# ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் வேண்டுகோள்!

சென்னை, செப்.18-

பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி வட்டச் செயலாளர் செயலாளர்கள் கூட்டம் இன்று (18.09.2024, புதன்கிழமை) மாலை 6 மணி அளவில் புலியூர் 2வது லேன் எனது அலுவலகத்தில் பகுதி கழக அவைத் தலைவர் புவி. பாலாஜி தலைமையில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., கழக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு தொகுதி பொறுப்பாளர் மருத்துவர் கலை கதிரவன் ஆலோசனைப்படி நடைபெறுகிறது.

இதில் அனைத்து வட்ட செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கழக ஆக்க பணிகள்

இவ்வாறு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.